# திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்த நாள் விழாக் காட்சிகள்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2025) தனது பிறந்த நாளையொட்டி சென்னை, கோபாலபுரம் இல்லத்திற்கு நேரில் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2025) தனது பிறந்த நாளையொட்டி சென்னை, சி.ஐ.டி .காலனி இல்லத்திற்கு நேரில் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். திருமதி ராஜாத்தி அம்மையார், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி கருணாநிதி எம்.பி., தயாநிதிமாறன் எம்.பி., விஜயா தாயன்பன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று, (1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “ஒரே இலக்கு – தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்” என்ற உறுதிமொழியினை, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் ஏற்றுக்கொண்டனர்.




சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது 72வது பிறந்தநாளை அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ராஜேஷ், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள் திருநாவுக்கரசர், எம். கிருஷ்ணசாமி மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சந்தித்து முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர். கழக முன்னோடிகள் உடன் உள்ளார்கள்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று(1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், தமிழ் மாநிலத் தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர்கள் வி. நாராயணசாமி, வைத்தியலிங்கம் எம்.பி. ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.